அந்தக் காலத்தில் வினோபா பாவே பூமிதான இயக்கத்தின் போது நாடு பூராவும் சுற்றும்போது எங்களைப் போன்றவர்கள் எல்லாம் அவர்களுக்கு நிலம் கொடுத்தோம். அந்தக் காலத்தில் இது போன்ற நிலங்களைக் கையகப்படுத்துவதில்லை. பிரி ஆகக் கொடுத்தோம். பூமி இல்லாமல் இருக்கின்ற ஏழை யெளியவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நிலங்களைக் கொடுப்பவர்கள் கூட கூடுமானவரை நல்ல நிலங்களைத் தங்களிடம் வைத்துக் கொண்டு மற்றவைகளைதான் பூமிதான இயக்கத்துக்குக் கொடுத்தார்கள். அப்போது இதில் சீலிங் ஒன்றும் இல்லை. அப்போது இந்த சூரியூர் கிராமத்திலும் நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்கள் இதற்காக கொடுக்கப்பட்டுள்ளன. அந்த நிலங்களையும் இது கட்டுப்படுத்துமா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாசுதேவன் அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர் திரு. தீட்சிதர் அவர்களுக்கும் உள்ள தொடர்பு பற்றி எனக்குத் தெரியாது. (சிரிப்பு)

திரு. டி. பொன்முடி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறு இடங்களில் இதுபோன்ற நில ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியிலுள்ள நாராயணகுப்பம் என்கிற கிராமத்தில். . . . . . (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு அமைச்சரிடம் இருந்து விடை வராது.

வீட்டு மனை வழங்குதல்.

* 7160—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, அண்ணா மடுவு என்ற இடத்தில் கால்நடை மருத்துவமனைக்கு அருகில் உள்ள ரெவின்யூ புறம்போக்கு இடத்தினை வீடு இல்லாத ஏழைகளுக்கு வீட்டு மனையாகப் போட்டுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

பெரியார் மாவட்டம், பவானி வட்டம், பச்சாம் பாளையம் கிராமம், புல எண் 438 இல் ஒப்படை கோரப் படும் அண்ணாமடுவு என்ற இடம் '' மந்தைப் புறம்போக்கு '' நிலம் ஆதலால் அதனை ஒப்படை செய்யத் தடை உள்ளது.

1990 ஏப்ரல் 20]

ஏற்கனவே இந்நிலம் பச்சாம்பாளையம் ஊராட்சிக்குப் பழத் தோட்டத்திற்காகப் பராதீனம் செய்யப்பட்டுள்ளது. இப்புலனை ஒட்டி மயானம் ஒன்றும் உள்ளது. மேற்சொன்ன காரணத்திற்காக இதில் ஏற்கனவே ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்கண்ட நிலத்தினை வீட்டு மனைக்காக ஒப்படை செய்ய இயலாது.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானி வட்டத்தில் உள்ள பச்சாம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த அண்ணாமடுவில் சற்றேறக்குறைய 5 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதிலே இரண்டு சுடுகாடுகள் இருக்கின்றன. மீதி இடங்களை எல்லாம், அந்தப் பகுதியிலே உள்ள, அருகிலேயுள்ள தோட்டச் சொந்தக்காரர்கள், உயர்ந்த இடத்தைச் சேர்ந்தவர்கள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். அது மந்தைப் புறம்போக்கு என்றுதான் அந்தக் காலத்திலேயிருந்தே ரெவின்யூ ரெக்கார்டில் இருக்கிறது. இன்றைக்கு அது மந்தையாக இல்லை. அந்த இடங்களை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சென்னையிலுள்ள பெரிய வருவாய்த் துறை அலுவலர்களை அங்கே அனுப்பி வைத்து, பார்வையிட வைத்து, அந்தப் பகுதியை அந்தியூர், அண்ணாமடுவு போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு, குறிப்பாக அங்கே பீடி சுற்றும் தொழிலாளர்களும், முஸ்லீம் சமுதாய மக்களும் வீட்டு மனை இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதால், இதை மறு பரிசீலனை செய்து அவர்களுக்கே வீட்டு மனை பட்டா வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயலுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

9-40 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே இது மந்தைப் புறம் போக்கு நிலமென்று சொன்னேன். உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தும், எனது கருத்தும் ஒன்றி வருகின்ற கருத்துக்கள் என்பதை நான் கொஞ்சம் விளக்கிச் சொல்ல விரும்புகிறேன். நான் முதலமைச்சர் அவர்களிடம்கூட இதைப் பற்றிச் சொன்னேன். கிளாசிபிகேஷனில் திருத்தம் தேவை, மாறுதல் தேவை. ஒரு காலத்தில் குளம், குட்டை, ஏரி, வாய்க்கால் என்று எல்லாம் இருந்திருக்கும். இப்போது அந்தப் பகுதிக்குப் போனால் ஏரியும் இருக்காது, குளமும் இருக்காது, குட்டையும் இருக்காது, ஒன்றும் இருக்காது. மேய்ச்சல் நிலம் என்று இருக்கும். மேய்வதற்கு அங்கே புல்லும் கிடையாது, ஆடும் கிடையாது, மாடும் கிடையாது. ஆக, Classification is a must. அதைப் பற்றி அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த ஆய்வுக்குப் பிறகு என்ன நடவடிக்கைகளை

எடுக்கமுடியுமோ அந்த நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்குமென்ற உறுதியை நான் இந்த அவைக்குத்தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், அவருடைய கனிவான வார்த்தைகளால் தெளிவாக விளக்கி இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே உள்ள நிலங்களை ரெவின்யூ நிலங்களாக மாற்றி, விரைவிலே பட்டா வழங்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே இதற்குப்பதில் சொல்லி விட்டேன் என்று நான் நம்புகிறேன். திருப்பித் திருப்பிக் கேட்பதன் மூலம் திட்டவட்டமான பதில் கிடைக்குமென்று எதிர் பார்க்கக்கூடாது.

தருமபுரி மாவட்டத்திற்கு அதியமான் மாவட்டம் பெயர் சூட்டுதல்.

* 8268 திரு. வ. முல்லைவேந்தன் :
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தருமபுரி மாவட்டத்திற்கு அதியமான் மாவட்டம் என்று பெயர் சூட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வ. முல்லைவேந்தன் : கொடுக்கல் இலாதானை பாரி என்றாலும், கொடுப்பாரிலை என்பார்கள். ஆனால் நடைபெற்றுக் கொண்டிருப்பதோ, கைமாறு கருதாமல் மாரிபோல் கொடுக்கின்ற கலைஞருடைய அரசு. தங்கத் தமிழில், சங்கத் தமிழால் அதியமானையும், ஔவையாரையும் பாராட்டி....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரடியாக வினாவிற்கு வாருங்கள்.

திரு. வ. முல்லைவேந்தன்: அதியமானின் பெயரை தர்மபுரி மாவட்டத்திற்குச் சூட்ட இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.